# நாட்டின் நிதித் துறையின் முதன்மை நிறுவனத்துடன் இணைந்து கொள்வதற்கான மாபெரும் வாய்ப்பு



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

இலங்கை மத்திய வங்கி, முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளுடன் கூடிய நாட்டின் நாணய மற்றும் நிதியியல் முறைமையினை முகாமைப்படுத்தும் குறிக்கோளுடன் நாடு அதன் மூலவளங்களிலிருந்து உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் பொருளாதாரத்தினை முகாமைப்படுத்துவதற்காகவும் அரசாங்கத்திற்கு தொழில்சார் நிபுணத்துவ மதியுரைகளை வழங்குவதற்காகவும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 1950இல் நிறுவப்பட்டது.

எமது தொலைநோக்கு யாதெனில் இலங்கையின் சுபீட்சத்திற்கு பங்களிப்புச் செய்யும் விதத்தில் நம்பகத் தன்மையும் இயக்கவாற்றலுமிக்க மத்திய வங்கியாக இருப்பதேயாகும். எமது பணியானது கொள்கைத் தூண்டல், மதியுரை, கடப்பாடு மற்றும் மிகுந்ததிறமை என்பவற்றினூடாக நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பனவற்றினைப் பேணுவதனை வலியுறுத்துகின்றது.

அவ்வாறு செயலாற்றும் பொழுது உள்ளார்ந்த தலைமைத்துவத்திற்கான ஈடுபாடு, வெளிப்படையான தன்மை, பொறுப்புக்கூற வேண்டிய தன்மை, ஒருங்கிணைப்பு, தொழில்சார் தகுதிக்கான கடப்பாடு, காலம் முழுவதும் நீடித்து நிற்கும் கற்கை, அறிவினை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளல் மற்றும் புதுமைகளை வரவேற்றல், இசைந்து செல்லல் மற்றும் துல்லியமான தன்மை, சுதந்திரமான செயற்பாடு, பெறுபேறுகளையும் வெளியீடுகளையும் பெற்றுக் கொள்வதற்கான தொடர்ச்சியான கடப்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு பற்றிய பணி நடைமுறை ஆகியவற்றின் விழுமியங்கள் மத்திய வங்கியினால் பேணப்பட்டு வருகின்றன.

**மத்திய வங்கியானது ஆர்வமும், குழுவாகப் பணியாற்றும் மனோபாவமும் தலைமைத்துவத் தகைமைகளும் கொண்ட இளம் கல்வியாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களை அதன் குழுவுடன் இணைந்து கொள்ளுமாறு அழைக்கிறது**

## முகாமைத்துவப் பயிலுநர்கள்

### இது உயர் அலுவலர் வகுப்பு தரம் I இற்கு இட்டுச் செல்லும்

பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்கும் இலங்கைப் பிரசைகள் மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

**1. தகைமைப் பிரமாணங்கள்**

**1.1 தேவைப்படும் கல்வி/ தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள்:**

அ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வரும் ஏதேனும் துறைகளில் ஒன்றில் குறைந்தபட்சம் 2ஆம் வகுப்பு (மேற் பிரிவு) அல்லது ஆகக் கூடியது 4.0 தரப்புள்ளிகளில் 3.5 தரப்புள்ளிச் சராசரி ஒன்றுடன் அல்லது குறைந்தபட்சம் 75 சதவீதம் நிறையேற்றப்பட்ட சராசரியுடன் கூடிய சிறப்புப் பட்டத்தை (குறைந்தபட்சம் மூன்று (3) ஆண்டுகள்) பெற்றிருத்தல் வேண்டும்;

- பொருளியல்/ வேளாண்மைப் பொருளியல்
- புள்ளிவிபரவியல்/ கணிதம்
- கணக்கியல்/ வங்கித் தொழில்/ நிதி
- பொறியியல்
- வர்த்தகம்/ முகாமைத்துவம்
- கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்
- பொது/ வியாபார நிருவாகம்

**அல்லது**

ஆ. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் துறைகளில் பட்டத்துடன் (குறைந்தபட்சம் மூன்று (3) ஆண்டுகள்) பின்வரும் தகைமைகளிலொன்றினை பெற்றிருத்தல் வேண்டும்;

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொருளியல்/ புள்ளிவிபரம்/கணனி விஞ்ஞானத்தில் பெற்றுக் கொண்ட முதுமானி அல்லது உயர்மட்டத் தர (குறைந்தபட்சம் ஓராண்டு (1)) பட்டப்பின் படிப்புப் பட்டம்.
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (CA- SRI LANKA)
- பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (CIMA-UK)
- பட்டய சான்றுபடுத்தப்பட்ட கணக்காளர் சங்க இணை உறுப்பினர் (ACCA)
- பட்டய நிதியியல் ஆய்வாளர் நிறுவகத்தின் பட்டயம் பெற்றவர் (Chater Holder of CFA - USA)
- இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (CMA - SL)
- இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் (IBSL)

**விண்ணப்பதாரிகள் பட்டம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தின் எழுத்துப்படி விபரங்களையும் (Transcript) அத்துடன் மேற்குறித்த பதவிக்கு அவர்கள் தகைமை பெறுகின்ற தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்களின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதிகளையும் கட்டாயமாக தரவேற்றம் செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றனர். கல்விசார்ந்த/ தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் எக்கட்டத்திலேனும் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

1.2 **வயது** : 2019 ஒத்தோபர் 15அன்று 30 வருடங்கள் அல்லது அதற்கு குறைவானதாகவிருத்தல்

1.3 **தெரிவு செய்யப்படும் நடைமுறை** : இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் போட்டிப் பரீட்சை மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

போட்டிப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் மூன்று வினாத் தாள்களுக்கு விடையளிக்குமாறு (பொது உளச்சார்பு, பகுத்தாய்வுப் பரீட்சை, பொது அறிவு) வேண்டப்படுவர்.

**2. பதவி தொடர்பான நியதிகளும் நிபந்தனைகளும்:**

- பயிற்சி ஒரு வருட காலப்பகுதியினைக் கொண்டதாகும். இக்காலத்தின் போது அனைத்தும் உள்ளடங்கலாக நிலையான படியாக மாதாந்தம் ரூ.75,000/- வழங்கப்படும்.
- பயிற்சிக் காலப்பகுதியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்கின்ற முகாமைத்துவப் பயிலுநர்கள் தகுதிகாண் உயர் பதவி அலுவலர்களாக வங்கியின் உயர் பதவி அலுவலகர் தரம் I இற்கான பதவிக்கு ஈர்த்துக் கொள்ளப்படுவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படுவர். ஓராண்டு தகுதிகாண் காலத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்குட்பட்டு உயர் பதவி அலுவலர் வகுப்பு தரம் I இற்கு உள்ளீர்க்கப்படும் திகதியிலிருந்து வங்கியின் நிரந்தரப்பதவியணியில் உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய அலுவலர்கள் கருத்திற்கொள்ளப்படுவர்.
- உயர் பதவி அலுவலர் வகுப்பு தரம் I இல் உள்ள அலுவலர்கள் கவர்ச்சிகரமான சம்பளம், ஆண்டிற்கு இரண்டு மாத மொத்தச் சம்பளத்திற்குச் சமமான விசேட கொடுப்பனவு, ஓய்வூதியம், சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய நன்மைகள், மருத்துவ நலன்கள், அலுவலர் கடன் வசதிகள் மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் என்பனவற்றிற்கு உரித்துடையவராவர்.
- முகாமைத்துவத்தினால் அறிவுறுத்தப்படுகின்றவாறு பயிலுநர் நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு வேண்டப்படலாம்.

## விண்ணப்பிக்கும் நடைமுறை

இப்பதவிக்கு வேண்டப்படும் தகைமை/ தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பிப்பதற்கு விருப்பமுடையோர் 2019 ஒத்தோபர் 15அன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் இணையத் தொடர்பு **https://www.cbsl.gov.lk/en/careers** ஊடாக மாத்திரம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது மேற்குறித்த இணையத் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் கட்டாயம் பின்பற்றுமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசிக்கப்படுகின்றது.

விண்ணப்பத்திகதியன்று தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவதுடன் தேவைப்படும் தகைமைகளை நிறைவுசெய்யாத ஏதேனும் விண்ணப்பம் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்

நேர்முகப் பரீட்சையின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அபேட்சகர்கள் இப்பதவிக்கு எக்காரணத்தின் கீழும் நியமிக்கப்படமாட்டர்.

எந்த விதத்திலேனும் செல்வாக்கு தேடுவது அவர்களைத் தகுதியற்றதாக்கும்.

நிரப்பப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை அல்லது ஆட்சேர்ப்பை ஒத்திவைத்தல்/ இரத்துச் செய்தல் என்பவற்றைத் தீர்மானிக்கும் உரிமை இலங்கை மத்திய வங்கிக்குரியதாகும்.

விண்ணப்பதாரிகளின் கல்விசார்/ தொழில்சார் தகைமைகளில் உள்ளடக்கப்பட்ட விடயப்பரப்புகளின் தொடர்பின் அடிப்படையில் விண்ணப்பங்களை தெரிவட்டவணைப்படுத்துவதற்கான தற்றுணிவினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

பணிப்பாளர் – மனித வளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112477330 தொலைநகல்: 0112477715